# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2015.06.25

**ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் : 06/2015**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும் அரசுக்குச் சொந்தமான கம்பனிகளில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு தொடர்பாடல் வசதிகளை வழங்குதல்.**

மேற்குறிப்பிட்ட விடயம் சம்பந்தமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள 2011.05.24 ஆம் திகதிய 05/2011 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. 2015.05.25 ஆம் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை ஏற்புடைத்தாக்கி பல்கலைக்கழக முறைமையிலும் செயற்படுத்துவதற்கு 2015.06.23 ஆம் திகதி கூடிய 919 ஆவது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுக் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டது.

3. அதற்கமைய, 05/2011 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செலவின எல்லைகள் 2015.06.01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் திருத்தப்படுகின்றன.

4. கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள உச்ச மாதாந்த எல்லைகளுக்கு உட்பட்ட வகையில் தொடர்பாடலுக்கான கட்டண உரிமைகளைப் பெற்றுள்ள உத்தியோகத்தர்களின் சகல தொடர்பாடலுக்கான கட்டணங்களும்(அலுவலக மற்றும் வதிவிடத் தொலைபேசி, தொலைநகல்(பெக்ஸ்), தனிப்பட்ட கையடக்கத் தொலைபேசி மற்றும் இணையத்தள வசதிகளுக்கான கட்டணங்கள்) செலுத்தித் தீர்க்கப்படும்.

| | பிரிவு | மாதாந்த உச்ச எல்லை(மாதாந்தக் கட்டணம் மற்றும் வரி அடங்கலாக) (ரூபாக்களில்) | பல்கலைக்கழக முறைமையில் உரிமை பெறுபவர்கள் |
|---|---|---|---|
| 01 | தலைவர் / தகுதிவாய்ந்த அதிகாரி | 13,000.00 | தலைவர் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உப தலைவர் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உபவேந்தர் |
| 02 | பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் / முகாமைத்துவப் பணிப்பாளர் /நிறைவேற்றுப் பணிப்பாளர் / செயற்பாட்டுப் பணிப்பாளர் | 10,000.00 | செயலாளர் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு, பிரதி உபவேந்தர், வளாக அதிபதி, நிறுவகப் பணிப்பாளர் |

| | | | |
|---|---|---|---|
| 03 | பிரதம நிதி அலுவலர் / பிரதம செயற்பாட்டு உத்தியோகத்தர் / உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் அதற்குச் சமமான பதவிகளை வகிக்கும் ஏனைய உத்தியோகத்தர்கள் | 9,000.00 | பதிவாளர் / மேலதிக செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு<br>பிரதம கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு<br>பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்,பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு<br>பீடாதிபதி/<br>பணிப்பாளர் (கல்வி தொழில்நுட்பம்), இலங்கை திறந்த பல்கலைக்கழகம்<br>நூலகர்/<br>கணக்காளர் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு<br>நிதிப் பொறுப்பாளர்/<br>உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.<br>பணிப்பாளர்(பிராந்திய கல்வி சேவைகள்), இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.<br>பணிப்பாளர்(நடவடிக்கைகள்), இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.<br>பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்), (U-EX தரம்) |
| 04 | பணிப்பாளர் சபை அங்கீகரிக்கும் ஏனைய நிறைவேற்று தர உத்தியோகத்தர்கள் | 5,000.00 | 922 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கைப் பிரகாரம் மத்திய மற்றும் கனிஷ்ட நிறைவேற்று தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகபூர்வ தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்.<br>கல்விப் பிரிவுத் தலைமை அதிகாரி |

5. அலுவலகத் தொலைபேசியை பெற்றுக்கொடுப்பதற்கான விதிமுறைகள்:

உத்தியோகபூர்வ தொலைபேசி என்பதிலிருந்து கருதப்படுவது யாதெனில், உயர் கல்வி நிறுவகங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் மேற்கொள்ளும் கடமைகளின் அளவைப் பொருத்து அந்தக் கடமைகளை மேற்கொள்வதனை இலகுபடுத்துமுகமாக அந்த உத்தியோகத்தரின் அலுவலகத்திற்கு நேரடி கம்பியுடன்கூடிய உத்தியோகபூர்வ தொலைபேசியொன்றைப் பெற்றுக்கொடுப்பதாகும். அத்துடன் சில உத்தியோகத்தர்கள் மேற்கொள்ளும் கடமைகளின் தன்மையைப் பொருத்து குறிப்பிட்ட உயர் கல்வி நிறுவகத்தின் கட்டுப்பாட்டு அதிகாரி அனுமதி வழங்கும் பட்சத்தில் அந்த உத்தியோகத்தருக்கு உத்தியோகபூர்வ தொலைபேசியொன்றைப் பெற்றுக்கொடுக்க முடியும்.

6. மேலே அட்டவணையில் 01 முதல் 04 வரையிலான பிரிவுகளில் அடங்காத உத்தியோகத்தர் ஒருவருக்கு அவர் மேற்கொள்ளும் கடமையின் தன்மையைப் பொருத்து கட்டுப்பாட்டு அதிகாரியின் அனுமதியுடன் தொலைபேசி வசதிகளை பெற்றுக்கொடுக்க முடியும்.

7. ஏதேனுமொரு மாதத்தின் செலவின எல்லையில் மீதிகள் இருப்பின் அதனை குறிப்பிட்ட நிதியாண்டின் எதிர்வரும் மாதங்களுக்காக முன்கொண்டுசெல்ல முடியும். அந்த மீதிகளை அடுத்த நிதியாண்டில் பயன்படுத்த முடியாது.

8. வதிவிடத் தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி அல்லது இணையத்தள வசதிகளைப் பெற்றுக்கொள்ளும்போது கொள்வனவு செய்யவேண்டியேற்படும் உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்களுக்கான செலவுகளை குறிப்பிட்ட உத்தியோகத்தர் ஏற்க வேண்டும். அந்த உபகரணங்களுக்கான செலவுகளை குறிப்பிட்ட உயர் கல்வி நிறுவகங்கள் ஈடு செய்யக் கூடாது.

9. ஒரு மாதத்திற்கும் அதிகமான காலம் சம்பளத்துடனான அல்லது சம்பளமற்ற விடுமுறையில் இருக்கும் உத்தியோகத்தர் ஒருவருக்கு குறிப்பிட்ட காலப்பகுதிக்கான வதிவிடத் தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி மற்றும் இணையத்தள வசதிகளுக்கான கட்டணங்களை ஈடு செய்யக் கூடாது. எவ்வாறாயினும், ஒரு மாதத்திற்கும் அதிகமான காலம் சம்பளத்துடனான அல்லது சம்பளமற்ற விடுமுறையில் இருக்கும் உத்தியோகத்தர் ஒருவர் தொடர்ந்து தனது கடமையிலும் ஈடுபடும் சந்தர்ப்பத்தில் அவரது வதிவிடத் தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி மற்றும் இணையத்தள வசதிகளுக்கான கட்டணங்களை ஈடுசெய்வதற்கான அனுமதியை வழங்குவதற்கு சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நடவடிக்கை மேற்கொள்வதற்கு கட்டுப்பாட்டு அதிகாரியினால் முடியும்.

10. இந்த சுற்றறிக்கை 2015.06.01 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும். 2011.05.24 ஆம் திகதி வெளியிடப்பட்ட 05/2011 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் நிதிச் சுற்றறிக்கை இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

இதன் பிரகாரம், நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிவாய் வேண்டுகின்றேன்.

**ஒப்பம்: பேராசிரியர் மொஹான் த சில்வா**

**தலைவர்**

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர் கல்வி அமைச்சு
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
6. பீடாதிபதிகள்
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
8. கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars)
10. நூலகர்களஃ சிரேஷ்ட உதவி நூலகர்கள் / உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள் / உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் / சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் / உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/6/3/29